Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the Financial Year 2004–2005."

*முற்பகல் 10–05*

## 4. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21–3–2005 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## நிறைவேற்றப்பெற்ற 2004-2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 6 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 1,90,10 | ... | ... |
| 7 | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 1,83,43 | ... | ... |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 4,43,00 | ... | ... |
| 13 | எரிசக்தித் துறை | 30,00 | ... | ... |
| 14 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 80,20 | 1 | ... |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,94,51 | ... | ... |
| 19 | உயர் கல்வித் துறை | 39,02 | ... | ... |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | ... | 1 | ... |
| 21 | உள் துறை-காவல் | 27,72,27 | 50,00 | ... |
| 25 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 20,41 | ... | ... |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | 1 | ... | ... |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | ... | 95,89 | ... |
| 33 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | ... | ... | 5,36,51 |
| 36 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 2,80,00 | ... | ... |
| 37 | பொதுத் துறை | 1,57,48 | ... | ... |
| 38 | பொதுப் பணித் துறை | 7,74,24 | 40,13 | ... |

2005 மார்ச் 23]

| கோரிக்கை | துறை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 40 | ஊரக வளர்ச்சித் துறை | 3 | ... | ... |
| 41 | பள்ளிக் கல்வித் துறை | 2 | ... | ... |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 60,31 | ... | ... |
| 45 | தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை | 87,47 | ... | ... |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1 | ... | ... |
| | பெருமொத்தம் | 53,12,51 | 1,86,04 | 5,36,51 |

## 3. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.